## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 9-2 - பண்டைநாளாலே
**(ஆழ்வார் இயற்கை உறவினான எம்பெருமானைத் திருப்புளிங்குடியில் கண்டு தமக்கு எல்லா உறவின் காரியமும் குறைவில்லாமல் அருளுமாறு ப்ரார்த்தித்தல்)**

3568 * பண்டை நாளாலே நின் திருவருளும் *
பங்கயத் தாள் திருவருளும்
கொண்டு * நின் கோயில் சீய்த்துப் பல்படிகால் *
குடிகுடி வழி வந்து ஆட்செய்யும் **
தொண்டரோர்க்கு அருளிச் சோதிவாய் திறந்து * உன்
தாமரைக் கண்களால் நோக்காய் *
தெண்திரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த *
திருபுளிங்குடிக் கிடந்தானே! 1

3569 குடி கிடந்தாக்கம் செய்து * நின் தீர்த்த
அடிமைக் குற்றேவல் செய்து * உன் பொன்
அடிக்கடவாதே வழி வருகின்ற *
அடியரோர்க்கு அருளி ** நீ ஒரு நாள்
படிக்களவாக நிமிர்த்த * நின் பாத
பங்கயமே தலைக்கணியாய் *
கொடிக்கொள் பொன் மதிள் சூழ் குளிர்வயல் சோலைத் *
திருபுளிங்குடிக் கிடந்தானே! 2

3570 கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம்
கிடத்தி? * உன் திருவுடம்பு அசைய *
தொடர்ந்து குற்றேவல் செய்து * தொல்லடிமை
வழி வரும் தொண்டரோர்க்கு அருளி **
தடங்கொள் தாமரைக்கண் விழித்து * நீ எழுந்து
உன் தாமரை மங்கையும் நீயும் *
இடங்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய் *
திருப்புளிங்குடிக் கிடந்தானே! 3

3571 புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை
இருந்து * வைகுந்தத்துள் நின்று *
தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே *
என்னை ஆள்வாய்! எனக்கருளி **
நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப *
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப *
பளிங்கு நீர்முகிலின்பவளம் போல் கனிவாய்
சிவப்ப * நீ காண வாராயே 4

3572 பவளம் போல் கனிவாய் சிவப்ப நீ காண

வந்து * நின் பல்நிலா முத்தம் *
தவழ் கதிர் முறுவல் செய்து * நின் திருக்கண்
தாமரை தயங்க நின்றருளாய் **
பவள நன்படர்க் கீழ்ச் சங்குறை பொருநல் *
தண்திருப்புளிங்குடிக் கிடந்தாய்! *
கவளமா களிற்றின் இடர் கெடத் தடத்துக் *
காய்சினப்பறவை ஊர்ந்தானே! 5

3573 காய்சினப்பறவை ஊர்ந்து * பொன்மலையின்
மீமிசைக் கார்முகில் போல்[1] *
மாசின மாலி மாலி மானென்று * அங்கு
அவர் படக் கனன்று முன் நின்ற **
காய்சினவேந்தே! கதிர்முடியானே! *
கலிவயல் திருபுளிங்குடியாய்! *
காய்சின ஆழி சங்கு வாள் வில் தண்டு
ஏந்தி * எம் இடர் கடிவானே! 6

3574 எம் இடர் கடிந்து இங்கு என்னை ஆள்வானே! *
இமையவர் தமக்கும் ஆங்கனையாய்! *
செம்மடல் மலரும் தாமரைப் பழனத் *
தண்திருப்புளிங்குடிக் கிடந்தாய்! **
நம்முடை அடியர் கவ்வை கண்டுகந்து *
நாம் களித்து உளநலம் கூர *
இம்மடவுலகர் காண நீ ஒரு நாள் *
இருந்திடாய் எங்கள் கண்முகப்பே 7

3575 எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம் *
இணையடி தொழுதெழுது இறைஞ்சி *
தங்கள் அன்பாரத் தமது சொல் வலத்தால் *
தலைத்தலைச் சிறந்து பூசிப்ப **
திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய்! *
திருவைகுந்தத்துள்ளாய்! தேவா! *
இங்கண்மா ஞாலத்து இதனுளும் ஒரு நாள் *
இருந்திடாய் வீற்றிடங்கொண்டே 8

3576 வீற்றிடங்கொண்டு வியன்கொள் மாஞாலத்து *
இதனுளும் இருந்திடாய் * அடியோம்
போற்றி ஓவாதே கண்ணினை குளிரப் *
புதுமலர் ஆகத்தைப் பருக **
சேற்றிள வாளை செந்நெலூடுகளும் *
செழும்பணைத் திருப்புளிங்குடியாய்! *

[1] போல

கூற்றமாய் அசுரர் குலமுதல் அரிந்த *
கொடுவினைப் படைகள் வல்லானே! 9

3577 கொடுவினைப் படைகள் வல்லையாய் * அமரர்க்கு
இடர் கெட அசுரர்கட்கு இடர் செய் *
கடுவினை நஞ்சே! என்னுடை அமுதே! *
கலிவயல் திருப்புளிங்குடியாய்! **
வடிவிணையில்லா மலர்மகள் * மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை *
கொடுவினையேனும் பிடிக்க நீ ஒரு நாள் *
கூவுதல் வருதல் செய்யாயே 10

3578 * கூவுதல் வருதல் செய்திடாய் என்று *
குரைகடல் கடைந்தவன் தன்னை *
மேவி நன்கமர்ந்த வியன்புனல் பொருநல் *
வழுதிநாடன் சடகோபன் **
நாவியல் பாடல் ஆயிரத்துள்ளும் *
இவையுமோர் பத்தும்[2] வல்லார்கள் *
ஓவுதல் இன்றி உலகம் மூன்றளந்தான் *
அடியிணை உள்ளத்து ஓர்வாரே 11

**அடிவரவு:** பண்டை குடி கிடந்த புளி பவளம் காய்சின எம்மிடர்
எங்கள் வீற்று கொடுவினை கூவுதல் ஓர்

[2] ஆயிரத்துள் இவையுமோர் பத்தும் / ஆயிரத்துள் இவையும் பத்தும்